

முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு, தூத்துக்குடி வடக்கு மாவட்டம், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி சார்பில் விளாத்திகுளம் எட்டையாபுரம் சாலை கே.சுப்பிரமணியபுரத்தில் மாபெரும் நடுமாட்டு வண்டி எல்கை பந்தயத்தினை தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர், கனிமொழி கருணாநிதி அவர்களும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் அவர்களும், கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். நிகழ்விற்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்கண்டேயன் தலைமை வகித்தார்.உடன் மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி, மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் வசந்தம் A.C.ஜெயக்குமார், விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, அன்புராஜன், சின்னமாரிமுத்து புதூர் ஒன்றிய செயலாளர்கள் ராதாகிருஷ்ணன், செல்வராஜ், மும்மூர்த்தி, நவநீதக்கண்ணன், காசிவிஸ்வநாதன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் இமானுவேல் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மகேந்திரன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆகாஷ் பாண்டியன் உட்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# பல்லடம் அரசு மருத்துவமனையில் ரூ.3.30 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிட கட்டுமான பணி

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், ஜுன்.16-
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்டம், பல்லடம் பகுதியில் அமைந்துள்ள கோழியின நோய் ஆய்வகம் மற்றும் தீவன, நீர் பகுப்பாய் வகத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பின்னர் பல்லடம் அரசு மருத்துவமனை வளாகத்தில் ரூ.3.30 கோடி மதிப்பீட்டில் தரைத் தளத்தில் 331.00 ச.மீ பரப்பளவில் வரவேற்பறை, பணி மருத்துவர், எக்ஸ்ரே, சி.டி.ஸ்கேன் அறை, அவசர சிகிச்சை பிரிவு, குழந்தைகள் மருத்துவ பிரிவு, கழிவறை மற்றும் மின்தூக்கி வசதிகளுடனும், முதல் தளத்தில் 331.00 ச.மீ பரப்பளவில்தீவிர சிகிச்சைப் பிரிவு (ஐ.சி.யூ), ஆய்வகம், அறுவை அரங்கு, மயக்க மீளறை, கழிவறைகள் மற்றும் மின்தூக்கி வசதிகளுடன் விபத்து மற்றும் எலும்பு முறிவு சிறப்பு சிகிச்சை பிரிவு கட்டடம் கட்டும் பணியினை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் பல்லடம் நகர கழக செயலாளர் நா. ராஜேந்திரகுமார், கழக விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் ச.ராஜசேகரன், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் கீர்த்தி சுப்ரமணியம்,

பல்லடம் நகர்மன்ற தலைவர் கவிதாமணி ராஜேந்திரகுமார், இணை இயக்குநர் (மருத்தவ நலப்பணிகள்) மரு.மீரா, செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை) முத்து சரவணன், உதவி செயற்பொறியாளர் செந்தில் கமலக்கரண், உதவி இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) மரு.பரிமலர் ராஜ்குமார்,

பல்லடம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் மரு.ராமசாமி உள்பட மாவட்ட, நகர கழக நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சாரந்த அலுவலர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி -

# காஞ்சிபுரம் மாநகராட்சியில் பொதுமக்கள் குறை கேட்பு முகாம்கள்!

## சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. மனுக்கள் பெறுகிறார்!

காஞ்சிபுரம், ஜுன் 16-
காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதி காஞ்சிபுரம் மாநகரத்தில் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் வழக்கறிஞர்.சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. மக்கள் குறை கேட்பு முகாம்கள் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் மாநகரத்தில் மக்கள் குறை கேட்பு முகாம் நடைபெறும் விவரம் வருமாறு: -

**மண்டலம் 1**

**16–06–2025 திங்கள்**

காலை 9 மணி, 1, 2, 10 ஆகிய வட்டங்கள் குஜராத்தி சத்திரம், காலை 10.30 மணி, 9, 16, 17 ஆகிய வட்டங்கள் அருண் பாலாஜி பார்ட்டி ஹால், மாலை 3 மணி, 6,7,8,18 ஆகிய வட்டங்கள் ராதா பார்ட்டி ஹால், மாலை 4.30 மணி, 3,4,5 ஆகிய வட்டங்கள் ஜெயகிருஷ்ணா பார்ட்டி ஹால், தாமல்வார் தெரு

**மண்டலம் 2**

**17–06– 2025 செவ்வாய்**

காலை 9.00 மணி 19, 21, 22 ஆகிய வட்டங்கள் - சாஹானா பார்ட்டி ஹால், திருக்காலிமேடு, காலை 10.30 மணி 20, 23, 24, 30 ஆகிய வட்டங்கள் கலைஞர் பவள விழா மாளிகை டி.கே.நம்பி தெரு

**நாள் – 18 . 6 . 2025 புதன்**

காலை 9மணி 25, 29, 28 ஆகிய வட்டங்கள் A.R.C. திருமண மண்படம் வடக்கு மாட வீதி, காலை 10.30 மணி - 26, 27 ஆகிய வட்டங்கள் - ஸ்ரீ பார்ட்டி ஹால், கன்னிகாபுரம்

**மண்டலம் 4**

**26.6.2025 – வியாழன்**

காலை 9.00 மணி - 42, 43 - 4வது மண்டல குழு அலுவலகம், காலை 10.30 மணி - 39, 40, 41 ஆகிய வட்டங்கள் - பல்லவன் நகர் பூங்கா, பகல் 12.00 மணி - 44, 45 ஆகிய வட்டங்கள் - அண்ணாமலையார் பார்ட்டி ஹால், பிற்பகல் 3.00 மணி - 11, 12, 13 ஆகிய வட்டங்கள் - சக்தி வேல் திருமண மண்டபம், மாலை 4.30 மணி - 14,15, 37 ஆகிய வட்டங்கள் VSMS திருமண மண்டபம், மடம் தெரு

**மண்டலம் – 3**

**28.6.2025 சனிக்கிழமை**

காலை 9.00 மணி 31, 32, 33 ஆகிய வட்டங்கள் சாலம்மாள் திருமண மண்டபம்,

காலை 10.30 மணி, 34, 35, 36 ஆகிய வட்டங்கள் திருப்பதி மஹால் ஆகிய இடங்களில் பொதுமக்கள் குறை கேட்பு முகாம்கள் நடைபெறுகிறது.

இதில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் க.செல்வம், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி எம்.மகாலட்சுமி யுவராஜ், மண்டலக் குழுத் தலைவர்கள் - மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசின் பல்வேறு துறை அலுவலர்களும் கலந்து கொள்கின்றனர்.

மேல்வரும் நிகழ்ச்சி நிரலின்படி நடைபெறவுள்ள முகாமிற்கு பொதுமக்கள் வருகை தந்து தங்கள் கோரிக்கைகளை மனுக்களாக வழங்கி பயன்பெறும் வகையில் பொதுமக்களுக்கு தகவல் தெரிவிக்கவும். மேலும் முகாமிற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்யவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நிகழ்வின் போது தங்கள் வட்டத்தின் மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்க அழைப்பு விடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு மாநகர கழகச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், 1வது பகுதி செயலாளர் கே.திலகர், 2-வது பகுதி செயலாளர் எஸ்.சந்துரு, 3-வது பகுதிச் செயலாளர் அ.தசரதன், 4-வது பகுதிச் செயலாளர் சு.வெங்கடேசன் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி இளைஞர் அணி சார்பாக 41வது வட்டம் சிவாஜி நகரில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, தலைமையில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். பொன்ராஜ் ஏற்பாட்டில் வட்ட செயலாளர் கி.தேவன் வரவேற்பில் பகுதி செயலாளர் சா. ஜெபதாஸ்பாண்டியன் முன்னிலையில் பொது மக்களுக்கு அசைவ உணவை மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, வழங்கினார். உடன் மாஸ் டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், பி.சீனிவாசன், இர.பொன் இளவரசன், இ.ரவிகுமார், மண்டல குழு தலைவர் வட்ட செயலாளர் நேதாஜி யு.கணேசன், ஆர்.எ.எம். சசிகுமார், வீ.கார்திக், ஜி.ராஜா, மீஞ்சூர் முகுந்தன், என்ஃபீல்ட் துரைராஜ், வி.மூர்த்தி, பி.விஜயா, எஸ்.குணசேகர், என்.முருகேசன், எஸ்.நரேந்திரகுமார், கே.தனலட்சுமி, ப.தேவராஜ், கே.அரிபாபு, என்.லோகநாதன், தன்ராஜ், கே.முரளி, கே.காளிதாஸ், டில்லிகாந்தி, எம்.திருமகள், ரோஸ்லின், எம். மணிகண்டன், கே.அருண்குமார், க.முருகன், ஜி.ஆரொன்ராஜ், கோ.ரீகன், ஜெ.சி. பீட்டர், ஜெ.பி.ஜோசுவா, யுவராஜ், ரேவதி, கிரிபாபு, நாகராஜ், கோபி, ஜெயராஜ், எளமந்தய்யா, துரைக்கண்ணு, முத்து, அன்பு, ரஞ்சித், தர்மா, யுவராஜ், சுப்ரமணி, ரமேஷ், ஜோதி, குமரவேல், அவின், சிவகுமார், ராஜேஷ், சுரேஷ், சுகுமார், சந்த்ரு, அன்பு, அப்பு, பாஜிபாபு, மோகன், ஜெய்சங்கர், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூபாய் 8 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட மனநல அவசர சிகிச்சை மற்றும் மீள் மையம், ரூபாய் 86 இலட்சம் மதிப்பீட்டில் நோயுற்ற பச்சிளம் குழந்தைகளை தாயுடன் ஒன்றிணைத்து தீவிர பராமரிப்பு அளித்து விரைவில் குணமடைய வைக்கும் பிரிவு, ரூபாய் 16 இலட்சம் மதிப்பீட்டில் முதல் நிலை துணை இனப்பெருக்க மையத்தினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் திறந்து வைத்து, ரூபாய் 60 இலட்சத்திற்கு வளர்ச்சி குறைபாடான குழந்தைகளுக்கு குரோத் ஹார்மோன் வழங்கி, மாவட்ட ஆட்சியர் சிறப்பு கண்ணொளி திட்டத்தின் கீழ் 50 நபர்களுக்கு இலவச கண் கண்ணாடியினை வழங்கினார். இதில் முதன்மை செயலாளர் பி.செந்தில்குமார், மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாநகர் மாவட்டச் செயலாளர், நா.கார்த்திக், தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோவை கணபதி ப.ராஜ்குமார், பொள்ளாச்சி கே.ஈஸ்வரசாமி, மாநகராட்சி மேயர் இரங்கநாயகி இராமச்சந்திரன், ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், ஏர்போர்ட் ராஜேந்திரன், மீனா லோகு, மருத்துவக்கல்லூரி முதல்வர் டாக்டர்.நிர்மலா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### வைகை அணையில் இருந்து

# மதுரை, திண்டுக்கல் மாவட்ட பாசனத்திற்காக தண்ணீர் திறப்பு!

தேனி, ஜுன் 16-
வைகை அணையில் இருந்து பெரியாறு பிரதான கால்வாயின் கீழுள்ள இரு போக பாசன நிலங்களுக்கு தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தது.

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள வைகை அணையில் இருந்து பெரியாறு பிரதான கால்வாயின் கீழுள்ள இரு போக பாசன நிலங்களின் முதல் போக சாகுபடிக்காக, வரும் அக்டோபர் 12ந்தேதி வரை தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

விநாடிக்கு 900 கன அடி வீதம் முதல் 45 நாட்களுக்கு முழுமையாகவும்,

அடுத்த 75 நாட்களுக்கு முறை வைத்தும் என 120 நாட்களுக்கு அணையின் நீரிருப்பைப் பொறுத்து திறக்கப்பட உள்ளது.

இதன் மூலம் மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 45,041 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, பத்திர பதிவுத்துறை அமைச்சர்மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு வைகை அணையில் இருந்து 900 கன அடி தண்ணீர் திறந்து வைத்தனர்.

வைகை அணையில் உள்ள பெரிய ஏழு மதகு வழியாக திறக்கப்பட்ட தண்ணீருக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இவர்களுடன் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்சித் சிங் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன்

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா மற்றும் தேனி வடக்கு மாவட்ட செயலாளர் உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன்எம் பி . சரவணகுமார்எம்எல்ஏ. மகாராஜன் எம் எல் ஏ. தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன்எம் எல் ஏ. ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

வைகை அணையின் மொத்த கொள்ளளவு 71 அடியாகும் தற்போது வைகை அணையின் நீரின் அளவு 61.22 அடியாக உள்ளது.

வைகை அணையின் நீர் இருப்பு 3,841 மில்லியன் கனடியாக உள்ளது.

வைகை அணைக்கு நீர்வரத்து 1,230 கன அடியாக உள்ளது.வைகை அணையில் இருந்து மதுரை தேனி திண்டுக்கல் ராமநாதபுரம் சிவகங்கை ஆகிய ஐந்து மாவட்டத்திற்கு குடிநீருக்காக 69 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

நிகழ்ச்சியில் தெற்கு மாவட்ட துணை செயலாளர் செந்தில், தேனி வடக்கு ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி, மீனவர்அணி வாரிய உறுப்பினர் முருகன், தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்செஞ்சூரி செல்வம், மதுரை தெற்கு மாவட்ட துணை செயலாளர் பாலாஜி, உசிலம்பட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் அஜித் பாண்டி, மேற்கு ஒன்றிய செயலாளர் எம்.பி. பழனி, தெற்கு ஒன்றிய செயலாளர் முருகன், செல்லம்பட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் சுதாகரன், சேடபட்டி சேர்மன் ஜெயச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கலைஞர் கருவூல துணை அமைப்பாளர்

# தஞ்சை இரா.ரத்தினகிரி மருத்துவமனையில் அனுமதி!

## குடும்பத்தினரிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் நலம் விசாரித்தார்!

தஞ்சை, ஜுன் 16 -
கலைஞர் கருவூல துணை அமைப்பாளர் தஞ்சை இரா.ரத்தினகிரி உடல் நலம் குன்றி தஞ்சை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிரச் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில் தஞ்சையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இரத்தினகிரி சிகிச்சைப் பெற்று வரும் மருத்துவமனைக்குச் சென்று அங்கு அவரின் குடும்பத்தாரிடம் நலம் விசாரித்தார். மேலும் மருத்துவர்களிடம் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார்.

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை! தி.மு.தனியரசு ஏற்பாட்டில்

# திருவொற்றியூர் தொகுதி தேர்தல் பணிகுறித்து நிர்வாகிகளுடன் கலந்தாலோசனைக் கூட்டம்!

## தொகுதி பொறுப்பாளர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரை! கலாநிதி வீராசாமி எம்.பி. – கே.பி.சங்கர் பங்கேற்பு!

சென்னை, ஜுன் 16-
திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டலக் குழு தலைவர் தி.மு. தனியரசு ஏற்பாட்டில் திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் வை.ம.அருள்தாசன், திருவொற்றியூர் மத்திய பகுதி செயலாளர் மண்டல குழு தலைவர் ஏ.வி.ஆறுமுகம் ஆகியோரின் வரவேற்பில் சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிகள் குறித்து நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் 13.6.2025 வெள்ளிக்கிழமையன்று காலை10 மணிக்கு டி.கே.பி.திருமண மாளிகையில் நடைபெற்றது.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை வகத்தார்.

திருவொற்றியூர் தொகுதி தேர்தல் பணி குறித்து கழக துணை பொதுப் செயலாளர், மண்டலப் பொறுப்பாளர் ஆ.இராசா எம்.பி. கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், மாநில வர்த்தகர் அணி துணை தலைவர் திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர் எஸ்.மோகன், ஜி.சந்திரபோஸ், வீ கவி கணேசன், வீ.ராமநாதன், மிசா ப.மதிவாணன், குறிஞ்சி எஸ்.கணேசன், எம்.ஆனந்தன், டி.ஏ. ராஜி, இரா.முருகேசன், சாந்தி பக்தன், ஆர்.சி.ஆசைதம்பி, வ.முத்துசாமி, எம். வி.குமார், கே.பிரபாவதி, எம்.தினகரன், த.கார்த்திகேயன், டி.சி.வி.மணிகண்டன், எம்.எல்.சரவணன், எஸ். தமிழ்செல்வன், குருத்து சி.முனுசாமி, க.வீ.சதிஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், எகா.கார்த்திகேயன், மு.சிவகுமார், டி.சேகர், மு.மாணிக்கவேலன், பி.தமிழரசன், கே.பவுல், கே.பி.சொக்கலிங்கம், கே.கண்ணன், டி.கணேசன், எம்.செல்வம், த.காரிகாலசோழன், ஆர். டி.மதன்குமார், எம்.எம்.செந்தில், எம்.கோமலவள்ளி, ஜி. தேவநேசன், கு.தமிழ்மணி, ரா.மோகனசுந்தரம், வீ.தியாகராஜன், டி.தேசிங்கு, ரா.உதயராஜ், பி.வெங்கடேசன், வி.ராஜகுமாரி, உமா சரவணன், சரண்யா கலைவாணன், சூசிலா ராஜா, பானுமதி சந்தர் உள்ளிட்ட பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில்

# கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள்!

## மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. அறிக்கை!

சென்னை, ஜுன், 16
சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள் நடத்துவது மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், மற்றும் பகுதி துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவுறுத்தல்படி, பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, கே.ஏழுமலை எம்.சி, நந்தனம் மதி எம்.சி, எஸ்.முரளி ஆகியோரின் ஆலோசனைக்கிணங்க, எனது தலைமையில் (ராஜா அன்பழகன் எம்.சி) செவ்வாய்கிழமை (1706 2025) மாலை 6 மணிக்கு, தி.நகர் பேருந்து நிலையம் அருகில் உள்ள சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அலுவலகத்தில் நடைபெறுகிறது.

எனவே சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுகொள்கிறேன்.

பொருள்: கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கழக அரசின் நான்கு ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டங்கள் நடத்துவது குறித்தும் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தேனி வடக்கு மாவட்டம் மார்க்கையன்கோட்டை பேரூராட்சி பகுதி முத்துச்சாமி புரத்தில்பகுதிநேர ரேஷன் கடையை வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன்எம்பி. திறந்து வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் கன்னியப்பட்டி முருகேசன் பேரூர் செயலாளர் முருகன்பேரூர் துணை செயலாளர் காமராஜ். தேனி வடக்கு மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் மகேந்திரன். மாவட்ட பிரதிநிதி சுருளி. பழனிவேல். ராஜன்.மாவட்ட தொழிலாளர் அணிதுணை அமைப்பாளர் சிங்கராஜ் கவுன்சிலர் ஐயப்பன் ஜெயந்தி மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.